13.07.2022
O.S. 192/2018

P.W.2 Karthickraja

குு.வி.

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிப்பதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். யார் அழைத்ததன் பேரில் சாட்சியமளிக்க வந்தேன் என்றால் வழக்கறிஞர் அழைத்ததன் பேரில் வந்தேன். நிரூபண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள் நான் கூறியதுதான் என்று சொன்னால் சரிதான். யார் யார் மீது வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் ஜெயராஜ், மாயத்தேவர் என்பவர்கள் நாகராஜன், சசிக்கலா, சதீஷ்குமார் ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள். கிரைய ஒப்பந்தம் வாதிகள் பிரதிவாதிகளுக்கிடையே எப்போது ஏற்பட்டது என்றால் 15.4.2015ல் குற்பட்டது. இந்த 15.4.2015ல் தான் நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று கையொப்பம் இட்டேன் என்று சொன்னால் சரிதான். 15.4.2015ம் தேதி கிரைய ஒப்பந்தம் ஏற்படவில்லை, 16.4.2015 தேதியில்தான் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் 15.4.2015ல் ஆவணம் எழுதப்பட்டுள்ளது. ஆனால் பதிவு செய்யப்பட்டது 16.4.2015. 16.4.2015 தேதியில்தான் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று கையொப்பம் இட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வாதிகளும் பிரதிவாதிகளும் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட நாளில் அசல் பத்திரங்கள் மாற்றம் செய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் மூலப்பத்திரங்கள் மாற்றிக்கொண்டார்கள். இந்தஆவணமானது கடனுக்காக ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதா அல்லது கிரையம் செய்யும் நோக்கத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதா என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் எனக்கு தெரியும். கிரைய ஒப்பந்தமாகத்தான் ஏற்படுத்திக்கொண்டார்கள். வாதிகள் கிரைய பத்திரம் ஏற்படுத்திக்கொள்வதற்கு விருப்பமாகவும் தயாராகவும் இருந்தார்களா என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் தெரியும். நான் பிரதிவாதிகளை சென்று பார்த்து ரூ.5 லட்சம் பெற்றுக்கொண்டு கிரையம் பதிந்து கொடுங்கள் என்று கேட்கவில்லை என்றால் நான் சென்று கேட்டேன். எனக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட விவரம் குறித்து முழுமையாக எந்த விவரம் தெரியாமலேயே வாதிகளுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

V R LATHA
Digitally signed by V R LATHA
Date: 2022.07.13 16:50:12 +0530

Prl.Sessions Judge,
Dindigul.